# முன்மாதிரி தாய்மார்களுக்கு உன்னத விருது



‘முன்மாதிரி இளம் தாயார்’ விருதுபெற்ற (இடக்கோடி) திருவாட்டி பெரிய நாயகி, ‘முன்மாதிரி தாயார்’ விருதுபெற்ற திருவாட்டி ஜமாலியா ஷரிகப். படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்

7 Oct 2019

வாழ்க்கையில் சந்தித்த சவால்களை எதிர்கொண்டு முன்மாதிரியாகத் திகழும் இரு பெண்களுக்கு நேற்று முன்தினம் விருது வழங்கப்பட்டது.

‘முன்மாதிரி தாயார்’ விருதை 64 வயதுடைய திருவாட்டி ஜமாலியா ஷரிஃப் வென்றார். 17 ஆண்டுகளுக்கு முன் விவாகரத்தான நிலையில், தங்க இடம் இல்லாமல் தம்முடைய மூன்று பிள்ளைகளையும் கரை சேர்க்க திருவாட்டி ஜமாலியா மிகவும் சிரமப்பட்டார்.

கிடைத்த வாடகை வீட்டில் இருந்துகொண்டு தனக்கிருந்த தொடக்கப்பள்ளி படிப்புக்கு ஏற்ற  ஒரு குறைந்த சம்பள வேலையில் சேர்ந்தார்.

இன்று இவரின் மூன்று பிள்ளைகளும் வாழ்க்கையில் ஒரு நல்ல நிலையை அடைந்துள்ளனர்.  மூத்த மகன் சேவைத் துறையில் உள்ளார். இரண்டாவது மகன் ஒரு தொழில்முனைவராகவும் இளைய மகள் சாங்கி பொது மருத்துவ மனையில் ஒரு மருத்துவராகவும் இருக்கின்றனர். தமக்கு ஏற்பட்ட சோதனைகளிலிருந்து மீண்டு மற்ற தாயார்களுக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழும் திருவாட்டி ஜமாலியாவுக்கு அதிபர் ஹலிமா யாக்கோப் விருது வழங்கினார்.

‘முன்மாதிரி இளம் தாயார்’ என்று சென்ற ஆண்டு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட விருது, 38 வயதான திருவாட்டி பெரிய நாயகி மணிவாசகத்திற்கு வழங்கப்பட்டது.

பாலர் பள்ளி ஆசிரியராக இருக்கும் திருவாட்டி பெரிய நாயகி, மூன்று பிள்ளைகளுக்குத் தாய். இவர் ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார். சிறுவர்களுக்கு இலவச நடன வகுப்பும் நடத்தி வருகிறார்.

இருவருக்கும் ‘ஜமியா சிங்கப்பூர்’ அமைப்பு விருதுகளை வழங்கியது.

**Translated to English Version**

# Excellence Award for Exemplary Mothers



The prototypical young mother is the (heroine) Thiruvatti big heroine and the 'role model' award winning trio Jamalia Sharif. Image: Straits Times

7 Oct 2019

The award was presented yesterday to two women who are exemplary in the face of challenges in life.

The 64-year-old actress, Jamalia Sharif, won the 'Exemplary Mother' award. Divorced 17 years ago, Thiruvathi Jamalia struggled to keep her three children without a golden place.

She stayed in a rented house and joined a low-paying job to attend elementary school.

Today, all three of their children are well on their way to life. The eldest son is in the service industry. The second son is an entrepreneur and the youngest daughter, Changi, is a doctor in the public health department. Chancellor Halimah Jacob presented the award to Trivati Jamalia, a role model for other mothers who have recovered from their ordeal.

The newly introduced award last year as 'exemplary young mother' was awarded to the 38-year-old Thiruvati big heroine Manivasakam.

Thiruvathi is the great heroine of the preschool and mother of three children. He has been involved in social work for over seven years. She also runs a free dance class for the boys.

The 'Jamia Singapore' awards were given to the two.